அசல் வழக்கு எண்: 50/2021
நாள்: 14.02.2024
PW.2
பெயர்: வள்ளிக்கண்ணு
க/பெ : பிச்சைக்கண்ணு
வயது : 45
ஊர் : வேம்பனூர்
தொழில்: நீரிழிவு நோய் , உப்புநீர் வியாதி உள்ளதால் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் வீட்டில் உள்ளேன்.

வாதி தரப்பு சாட்சியான வள்ளிக்கண்ணு ஏற்கனவே நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணை சார்வு செய்யப்பட்டது. கடந்த 24.01.2024 அன்று இவ்வழக்கின் வாய்தா தேதியன்று உடல்நிலை சரியில்லாததால் சாட்சி நீதிமன்றத்திற்கு வரஇயலவில்லை. தற்பொழுது வாதி நீதிமன்றத்தில் ஆஜரானார். வாதி சுயநினைவுடன் உள்ளார் என்பது வழக்கமான இந்நீதிமன்ற கேள்விகளின் மூலம் தெரியவருவதால், சாட்சி சாட்சியம் அளிக்க அனுமதிக்கப்படுகிறார்.

<u>முதல்விசாரணை:–</u>

நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை ஏற்கனவே வந்ததன்பேரில் தான் இன்று சாட்சியம் அளிக்க வந்துள்ளீர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கை நாகராஜ் தாக்கல் செய்துள்ளார். ஜெயலெட்சுமி அம்மாவுக்காக நான் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன். இலுப்பூர் அரசு மருத்துவமனையில் ஜெயலெட்சுமி மருத்துவம் எடுத்துக்கொள்வதற்காக கடந்த 6, 7 வருடங்களுக்கு முன்பாக வந்தபொழுது நானும், மருத்துவம் எடுத்துக்கொள்வதற்காக இலுப்பூர் அரசு மருத்துவமனைக்கு சென்றபோது, எங்கள் இருவருக்கும் பழக்கம் ஏற்பட்டது. நாங்கள் அறிமுகமாகிக்கொண்டபோது, நான் வேம்பனூர் என்றும், அவர் இலுப்பூர் டவுன்சிப்பில் குடியிருப்பதாகவும், சொல்லி அறிமுகம் ஆகிக்கொண்டோம். மீண்டும் 5, 6 மருத்துவசிகிச்சைக்காக இலுப்பூர் அரசுமருத்துவமனைக்கு நான் சென்றபோது, ஜெயலெட்சுமியை மருத்துவமனையில் வைத்து நான் பார்த்துள்ளேன். அப்போது நான் ஜெயலெட்சுமியை பார்த்து இவ்வளவு உடம்பு சரியில்லாமல் நீங்கள் மட்டும் தனியாக வந்துள்ளீர்களே யாரும் உங்களுக்கு இல்லையா என்று கேட்டேன். அதற்கு எனக்கு ஒரு மகன் இருக்கிறார். அவர் பெயர் என்ன என்று கேட்டேன். நாகராஜ் என்று சொன்னார். அவர் தற்போது இலுப்பூர் அருகில் உள்ள ஆலத்துாரில் இருந்து வருவதாக கூறினார். என்னை ஜெயலெட்சுமி ஒருமுறை போன் செய்து, இலுப்பூர் பிடாரிகோவிலுக்கு சாமி கும்பிடுவதற்காக அழைத்து நாங்கள் இருவரும் பேசிக்கொண்டிருந்தபோது, ஜெயலெட்சுமி என்னிடம் அவருக்கு அடிக்கடி உடல்நிலை சரியில்லாமல் போய்விடுவதாகவும், அவ்வாறு மிகவும் உடல்நிலை சரியில்லாமல்

போகும்பட்சத்தில் என் மகன் மட்டும் என்னை பராமரித்துக்கொள்ள முடியாது என்றும், அதனால் என்னை அழைப்பாதாகவும், அவ்வாறு ஜெயலெட்சுமி அழைக்கும்போது, என்னை அவருடன் வந்து தங்கி பார்த்துக்கொள்ள சொன்னார். நான் ஜெயலெட்சுமியிடம் எனக்கு வருவதற்கு விருப்பம் இல்லை என்றும், என் கணவரிடம் கேட்டு சம்மதம் கூறுகிறேன் என்று சொல்லியிருந்தேன். நான் என் கணவரிடம் ஜெயலெட்சுமியின் உடல்நிலை பற்றி விளக்கியபோது, அவரும் சரி என்று ஒப்புக்கொண்டார். பின்பு ஜெயலெட்சுமி உடல்நிலை சரியில்லாதபோது, நான் என்கணவரை அழைத்துக்கொண்டு டவுன்சிப்பிற்கு சென்றேன். அப்போது காரை வைத்துக்கொண்டு ஜெயலெட்சுமியின் மகன் நாகராஜன் அந்த இடத்தில் இருந்தார். ஜெயலெட்சுமி நாகராஜனை காண்பித்து இவர்தான் என் மகன் என்று என்னிடமும் என் கணவரிடமும் அடையாளம் காண்பித்தார். **(தற்போது சாட்சி சாட்சியம் அளித்துக்கொண்டிருக்கும்போது, சாட்சியுடன் உடன்வந்த நபரான 18 வயதுடைய ஜெகதீஸ்வரன் நாகராஜன் என்று சாட்சி கூறிக்கொண்டு இருக்கும்போது, நாகராஜன் கிடையாது நாகராஜ் என்று கூறினார்.)** ஜெயலெட்சுமியை நானும், என்கணவரும், நாகராஜ் ஆகிய மூன்று பேரும் திருச்சியில் உள்ள ஒலிம்பியா என்ற மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச்சென்றோம். நாகராஜ் மருத்துவமனைக்கு சென்றதும், ஜெயலெட்சுமியின் தங்கை கணவருக்கு போன் செய்து, மருத்துவமனையில் வந்து சேர்த்துவிட்டதாக கூறினார். அவர் ஜெயலெட்சுமிக்கு மருத்துவசெலவு செய்யும் அளவுக்கு என்னிடம் பணம் இல்லை என்று நேரில் வந்து கூறிவிட்டு சென்றுவிட்டார். நாகராஜ் தான் ஜெயலெட்சுமிக்கு மருத்துவமனையில் மருத்துவ சிகிச்சைக்கான பணம் முழுவதையும் கட்டினார். நாகராஜ் ரூ.10,000/– கட்டுகள் என்று சொல்லி இரண்டு கட்டுகளை கொடுத்தார். எவ்வளவு செலவு செய்தார் என்று எனக்கு தெரியாது.

ஒலிம்பியா மருத்துவமனையில் ஜெயலெட்சுமி 6, 7 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை இருக்கும்போதே, ஜெயலெட்சுமி தங்கை அந்த மருத்துவமனைக்கு வந்தார். ஜெயலெட்சுமியின் தங்கை ஜெயலெட்சுமியை வேறு ஒரு மருத்துவமனைக்கு மருத்துவம் பார்ப்பதற்காக அழைத்தார். ஆனால் ஜெயலெட்சுமி என் மகன் நாகராஜை விட்டு எங்கும் வரமாட்டேன் என்று கூறினார். ஜெயலெட்சுமி கேட்டுக்கொண்டதற்கிணங்க ஜெயலெட்சுமியை ஒலிம்பியா மருத்துவமனையில் இருந்து திருச்சியில் உள்ள கே.எம்.சி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக நாகராஜ் அழைத்துச்சென்றார். கே.எம்.சி மருத்துவமனையில் ஜெயலெட்சுமி உள்நோயாளியாக 6, 7 நாட்கள் சிகிச்சையில் இருந்தபோது, ஜெயலெட்சுமி சிகிச்சையில் இருக்கும்போதே என்னிடம் எனக்கு அடிக்கடி உடல் நிலை சரியில்லாமல் போய்விடுகிறது, என் மகனுக்கு ஏதாவது செய்யவேண்டும் என்று கூறினார். ஜெயலெட்சுமி நாகராஜை அழைத்து வழக்கறிஞரை அழைத்து வர சொல்லி சொன்னார். வழக்கறிஞரை நாகராஜ் அழைத்து வந்தவுடன் கே.எம்.சி மருத்துவமனையிலேயே, ஒரு உயிலை அவருடைய மகன் நாகராஜிக்கு எழுதி வைத்தார். அந்த உயிலில்

ஜெயலெட்சுமியின் தங்கை காமேஸ்வரி ஒரு கையொப்பம் செய்தார். வழக்கறிஞர் ஒரு கையொப்பம் செய்தார். என்னை அழைத்து ஜெயலெட்சுமி என் மகனுக்கு நான் ஒரு உயில் எழுதியிருக்கிறேன் என்று சொல்லி, என்னிடம் அந்த உயிலில் கையொப்பம் போடசொன்னார். நான் அந்த உயிலில் கைரேகை செய்தேன். என்னிடம் காட்டப்படும் உயிலில் உள்ள கைரேகைகளில் எந்த கைரேகை என்னுடைய கைரேகை என்னால் தற்போது அடையாளம் காட்ட இயலாது. ஜெயலெட்சுமி உயிலை எழுதிவைத்த பிறகு 2, 3 நாட்களில் ஜெயலெட்சுமி இறந்துவிட்டார். ஜெயலெட்சுமியின் தங்கை மகன் ஜெயலெட்சுமி இறந்தபிறகு ரூ.20,000/–த்தை கே.எம்.சி மருத்துவமனையில் கட்டினார். இந்த விவரம் தெரிந்த ஜெயலெட்சுமியின் தங்கை தன்னுடைய அக்கா தனக்கு எந்த சொத்தும் கொடுக்கவில்லை என்பதால் தன் மகன் ஜெயலெட்சுமிக்கு கொடுத்த ரூ.20,000/–ம் பணத்தை உடனே வேண்டும் என்று கூறினார். நாகராஜ் அந்த ரூ.20,000/–பணத்தை உடனடியாக ஜெயலெட்சுமி தங்கை மகனிடம் கொடுத்துவிட்டார். அதன்பின்னிட்டு ஜெயலெட்சுமியின் உடலை ஜெயலெட்சுமியின் மகன் நாகராஜ் தான் கொண்டுவந்து, கொள்ளிடம் அருகில் காயத்திரி மடம் அருகில் அடக்கம் செய்தார். ஜெயலெட்சுமியின் உடலை அடக்கம் செய்யும்போது நான் உடனிருந்தேன்.

<u>1வது பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை:–</u>

சேதுராம அய்யரை உங்களுக்கு தெரியுமா என்றால் எனக்கு நேரடியாகத் தெரியாது. ஜெயலெட்சுமி என்னிடம் சொல்லியதன் பேரில் சேதுராம அய்யர் ஜெயலெட்சுமியின் தந்தை என்று எனக்குத்தெரியும். நாகராஜ் உங்களுக்கு உறவினரா என்றால் இல்லை. பக்கத்து ஊரா என்றால் இல்லை. எங்கள் ஊருக்கும் நாகராஜ் ஊருக்கும் 6, 7 கிலோமீட்டர் துாரம்இருக்கும்.

உங்களிடம் வெள்ளைப்பேப்பரில் கைரேகை வாங்கினார்களா என்றால் இல்லை. என்னிடம் உயிலில் கைரேகை வாங்கினார்கள். நீங்கள் உயிலில் கைரேகை வைக்கும்போது, வேறு யாருடைய கைரேகையோ, கையொப்பமோ அந்த உயிலில் இருந்ததா என்றால் வேறு கைரேகையோ, கையொப்பமோ நான் கைரேகை வைக்கும்போது, உயிலில் இல்லை.

ஜெயலெட்சுமியின் உடன்பிறந்த நபர்கள் யார் யார் என்று உங்களுக்குத் தெரியுமா என்றால் என்னிடம் ஜெயலெட்சுமி சொல்லியிருக்கிறார். நாகராஜ் ஜெயலெட்சுமியின் குடும்பத்தில் பிறந்தவரா என்றால் அதுப்பற்றி எனக்குத் தெரியாது. ஜெயலெட்சுமி நாகராஜை காண்பித்து என் மகன் என்று என்னிடம் கூறியுள்ளார். ஜெயலெட்சுமி நாகராஜை மகன் என்று கூறியதற்கு எவ்வாறு மகன் என்ற விவரத்தை நீங்கள் கேட்டு தெரிந்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான்.

திருச்சியில் ஒலிம்பியா மருத்துவமனையில் எந்த தேதியில் ஜெயலெட்சுமி சேர்ந்தார் என்ற விவரம் உங்களுக்குத்தெரியாது என்றால் சரிதான். அதேபோல் கே.எம்.சி மருத்துவமனையில் ஜெயலெட்சுமி எந்த தேதியில் சேர்க்கப்பட்டார் என்ற விவரம் உங்களுக்குத்தெரியாது என்றால் சரிதான். ஜெயலெட்சுமி எந்த தேதியில் இறந்தார் என்று உங்களுக்குத் தெரியாது என்றால் தேதி எனக்கு

நினைவில் இல்லை.

வாதி நாகராஜ் என்னென்ன ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் உங்களுக்குத் தெரியாது என்றால் சரிதான். உங்களிடம் கையொப்பம் வாங்கியபோது, எத்தனை பேப்பரில் உங்களிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்று உங்களுக்கு தெரியாது என்றால் ஒருபேப்பரில் தான் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள்.

இறந்துபோன ஜெயலெட்சுமிக்கு 1ம் பிரதிவாதி காமேஸ்வரி மட்டும் தான் சட்டப்படியான வாரிசு என்று லால்குடி வட்டாட்சியர் வாரிசு சான்று வழங்கியுள்ளதன்பேரில், ஜெயலெட்சுமியின் சொத்துக்களை அனுபவித்து வருகிறார் என்றால் அதுப்பற்றி எனக்குத் தெரியாது. நாகராஜை ஜெயலெட்சுமியின் நேரடி வாரிசு இல்லை என்று சொல்லி அவருடைய மனு இலுப்பூர் வட்டாட்சியரால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் அதுப்பற்றி எனக்குத் தெரியாது.

அந்த உயிலில் சொத்துவிவரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்ற விவரம் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். ஜெயலெட்சுமியும், காமேஸ்வரியும் நீங்கள் பார்க்கும்போது கையொப்பம் செய்தார்கள் என்றால் சரிதான். உங்களிடம் காட்டப்படும் உயில் ஆவணத்தில் காமேஸ்வரி, கையெழுத்தும், ஜெயலெட்சுமியின் கையெழுத்து எது என்று உங்களுக்கு தெரியுமா என்றால் அதுப்பற்றி எனக்குத் தெரியாது. நான் படிக்கவில்லை. வழக்கிறஞர் நீங்கள் பார்க்கும்போது கையொப்பம் செய்தாரா என்றால் ஆமாம். உயில் ஆவணத்தில் மீதம் உள்ள இரண்டு சாட்சிக்கையெழுத்துக்கள் யார் என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். மற்ற இரண்டு சாட்சிகள் உங்களுக்கு முன்பாக கையொப்பம் செய்யாததால், அவர்கள் யார் என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான்.

சீத்தப்பட்டி கிராமம் எந்த ஊருக்கு அருகில் உள்ளது என்றால் அதுப்பற்றி எனக்குத் தெரியாது. நாகராஜ் எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று உங்களுக்கு தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது. நாகராஜ் உங்களுடைய உறவினர் என்பதால், அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அவர் சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில், இந்த ஜெயலெட்சுமி இறந்துவிட்டார் என்பதால், நாகராஜ் சொல்லிக்கொடுத்ததன்பேரில் அவருக்கு ஆதரவாக நீங்கள் பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**2 மற்றும் 3 வது பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை:–**

உங்களிடம் காட்டப்படும் உயிலில் நீங்கள் வைத்ததாக சொல்லும் உங்கள் கைரேகைக்கு அருகில் உங்களுடைய கைரேகை என்றோ, உங்களுடைய முழுமுகவரி குறிப்பிட்டோ உயில் எழுதப்படவில்லை என்றால் எனக்கு படிக்கத்தெரியாததால் அதுப்பற்றி எனக்குத் தெரியாது. உயிலில் எந்த கைரேகை உங்களுடைய கைரேகை என்று உங்களால் அடையாளம் காட்டமுடியாததால் உண்மையில் நீங்கள் உயிலில் கைரேகை செய்யவில்லை என்றால் சரியல்ல.

உங்களுடைய முகவரியை மற்றும் அடையாளத்தை நிரூபிக்கும் வகையில் எந்த அடையாள ஆவணத்தையும் நீங்கள் நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரியல்ல. உங்களுடைய பெயர் கைரேகைக்கு அருகில் குறிப்பிடாததால், உயிலில் உள்ள கைரேகை உங்களுடையதல்ல என்றால் சரியல்ல. வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு ஒரு பிச்சைக்கண்ணு மனைவி வைத்த கைரேகையை தனது கைரேகை என்று நீங்கள் பொய்யாக வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

//sd/–வள்ளிக்கண்ணு,
PW.2.

//sd//– எஸ்.அன்புதாசன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்(மு.கூ.பொ)